உ

கணபதிதுணை.

சேந்தன்

# திவாகரம்

முதலாவது

## தெய்வப்பெயர்த் தொகுதி.

மூலபாடம்.

———*———

இஃது

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பரிசோதித்துச்

சித்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியா

ரவர்களாற்


நமது

பிரபாகர

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

௧௮௮௯ ௵ - ஆகஸ்டு ௴

ள

உ

கடவுள் துணை.

# சேந்தன் - திவாகரம்

## முதலாவது - தெய்வப்பெயர்த்தொகுதி.

### மூலபாடம்.

காப்பு நேரிசைவெண்பா

தந்திமுகத்தெந்தை சதங்கைப்பதம்போற்றிச்
சிந்தைவிளக்காந் திவாகரத்துள் - வந்த
தொகுதியொருபன்னிரண்டுஞ்சோராமனோ
பகுதியுறமனமே பற்று

சூத்திரம்

| | |
|---|---|
| சிவன்பெயர். | நாரிபாகன் |
| சங்கரனிறையோன் | முக்கட்பகவன் |
| காமதகனன் | பசுபதிபரமன் |
| கங்காதரனே | கொன்றைசூடி |
| கறைமிடற்றண்ணல் | கொலைமழுவாளி |
| கூற்றையுதைத்தோன் | ஈமத்தாடி |
| குன்றவில்லி | பிஞ்சகன்பித்தன் |
| ஏற்றுவாகனன் | ஆனையுரித்தோன் |
| திரியம்பகன்சோதி | அரன்சிவனுருத்திரன் |
| நக்கன்சடையோன் | காலகாலன் |

கபாலமூர்த்தி
நீலகண்டன்
நீறணிகடவுள்
அரவாபரணன்
ஆரழலாடி
பிறையதுசூடி
பெருமானுமாபதி
அழலதுவேந்தி
அமலனநந்தன்
பரசுபாணி
சுடலையாடி
மானிடமேந்தி
மறைமுதல்யோகி
புலித்தோலுடையோன்
புரமூன்றெரித்தோன்
பினாகபாணி
பேயோடாடி
பூதநாதன்
புணர்கங்காளன்
ஞானமூர்த்தி
ஈசனநாதி
ஐம்முகன்பகவன்
ஆதிபாண்டரங்கன்
அந்திவண்ணன்
ஆலமர்கடவுள்
நந்திநம்பன்
நாதன்றற்பரன்
கண்ணுதன்மூர்த்தி
கையிலையாளியென்
றெண்ணியநாமம்
இன்னமும்பலவே (௧)

(திருமால்பெயர்.)

மாயோன்மாதவன்
நாரணன்கேசவன்
சீதரன்றிருமகன்
பூமிகொழுநன்
விண்டுவிறலரி
திரிவிக்கிரமன்
உந்திபூத்தோன்
உவணமுயர்த்தோன்
வாமநன்கண்ணன்
கோவிந்தனச்சுதன்
ஆழ்கடற்றுயின்றோன்
அரவணைச்செல்வன்
சக்கராயுதனே
சங்கமேந்தி
கருங்கடல்வண்ணன்
கமலக்கண்ணன்
சாரங்கபாணி
தகுபஞ்சாயுதன்
உலகமுண்டோன்

உலகினையளந்தோன்
நாரசிங்கன்
ஆதிவராகன்
பதுமநாபன்
மதுசூதநனெடு
தாமோதரனே
சகுபீதாம்பரன்
காவற்கடவுள்
முராரிமுகுந்தன்
பெருமான்பிரமன்
தந்தையென்றிவைமுதல்
திருமாற்கநந்தம்
சிறந்ததொல்பெயரே(௨)

(பிரமன்பெயர்.)

உந்தியிலுதித்தோன்
ஒளிமலர்மிசையோன்
அன்னவூர்தி
அன்னமுயர்த்தோன்
நான்முகன்மான்மகன்
நலங்கேழெண்கணன்
வானவர்முதல்வன்
மண்பொதுத்தந்தை
இறைவன்குரவன்
மறையோன்விரிஞ்சன்
அந்தணன்ஞாநன்
அயன்வரன்றிசைமுகன்
பிதாமகன்விதாதா
கமலயோனி
வேதாப்போதன்
விதிபரமேட்டி
இரணியகருப்பன்
படைப்போனிவைமுதல்
அரணியல்பிரமற்
கனந்தம்பெயரே (௩)

(இந்திரன்பெயர்.)

புரந்தரன்புநிதன்
பொன்னகர்க்கிறைவன்
வாசவனமரர்கோன்
மாமுகிலூர்தி
வேள்விநாயகன்
விண்முழுதாளி
ஆயிரங்கண்ணன்
அயிராணிகேள்வன்
மருத்துவன்மகவான்
வலாரிவிருத்திராரி
வெள்ளைவாரணன்
இமையவர்வேந்தன்
பாகசாதனன் ஆகண்டல
னே,வச்சிரபாணி
சதக்கிருதென்றிவை
எச்சமிலிந்திரற்
கியன்றதொல்பெயரே

(கணபதியின்பெயர்.)

ஒற்றைக்கொம்பன்
விநாயகனைங்கரன்
வெற்றியானை
முகவன்கணபதி
பாசாங்குசதரன்
ஆகுவாகனனே (ரு)

(முருகன்பெயர்.)

முருகன்சூர்ப்பகை
செட்டிகுமரன்
அறுமீன்காதலன்
சேவலங்கொடியோன்
கார்த்திகேயன்
கடம்பன்சுவாமி
வேலுடைக்கடவுள்
மேலவர்க்கிறைவன்
வரைபகவெறிந்தோன்
வள்ளிமணாளன்
அரன்மகன்குறிஞ்சிமன்
சரவணத்துதித்தோன்
அறுமுகன்விசாகன்
குகன்செய்செவ்வேள்
தேவர்சேனாபதி
மயிலாளிசேந்தன்
கந்தன்காங்கேயன்
வேளெனச்செப்புவர்

(காமன்பெயர்)

வேனிலாளி
வேண்மதனநங்கன்
மாரன்பூவாளி
மன்மதன்கந்தர்ப்பன்
பஞ்சபாணன்
கருப்புவில்லி
இரதிகாந்தன்
மகரமுயர்த்தோன்
திருமால்புதல்வன்
வசந்தனென்றிவை
வருமால்காமற்
கியன்றவன்பெயரே (எ)

(வைரவன்பெயர்)

வைரவன்காரி
வடுகக்கடவுள் (அ)

(ஐயனார்பெயர்)

கோழிக்கொடியோன்
சாதவாகனன்
காரிசாத்தன்
கடனிறவையன் (கூ)

வைச்சிரவண்ணன்பெயர்

மந்திரிகுபேரன்
நிதிக்கோனியக்கன்

பிங்கலனரற்குப்
பிரியாத்தோழன்
வடதிசைத்தலைவன்
இயக்கர்வேந்தன்
அளகையாளி
ஆயமுற்காவலன்
புட்பகவூர்தி
நரதன்மரகதனென
வைப்பநாமம்
வைச்சிரவணற்கே (ம)
(அருகன்பெயர்,)
அநகநசலன்
அநகுணனபயன்
அமையனமிவன்
அதிசயனமலன்
பூரணன்புங்கவன்
புணர்முக்குடையோன்
அசோகுடைச் செல்வன்
அண்ணரத்துவன்
ஆதியங்கடவுள்
அறவாழியந்தணன்
அரியணைச்செல்வன்
அருளாழிவேந்தன்
பண்ணவன் பகவன்
எண்குணன்மாசேநன்
விண்ணவன்றேவன்
விரலோன்விளங்கொளி
பொன்னெயிலுதன்
பூமிசைநடந்தோன்
முனைவன்வீரன்
முதல்வன்புநிதன்
காமற்காய்ந்தோன்
கமலவூர்தி
சிநேந்திரன்நிகம்பரன்
சாந்தன்புண்ணியன்
மூர்த்தியாசரன் [தோன்
முழுதொருங் குணர்ந்
வரதன்சிநன்வரன்
என்றிவைமுதலா
வருகற்கின்னம்
அநந்தம்பெயரே. (மக)

புத்தன் பெயர்.

அண்ணல்வாமன்
அருங்கலைநாயகன்
புண்ணியமுதல்வன்
ஆதிபுங்கவன்
பாரின்மிசையோன்
சாந்தன்புநிதன்
பகவன்சைநன்
அறவன்மூர்த்தி
போதிவேந்தன்
சிநன்வரன்புத்தன்

ஏகதேவன்
முக்குற்றங்கடிந்தோன்
அருணெறிசுரக்கும்
செல்வனநந்தன்
லோசநன்வளர்ந்த
பூமிசைநடந்தோன்
அகளங்கன்முத்தன்
புண்ணியமூர்த்தி
பஞ்சதாரைவிட்
டவுணர்க்கூட்டிய
வெஞ்சவில்பெருமாற்
கின்னவும்பலவே. (௰உ)

(நமன்பெயர்.)

அந்தகன்றருமன்
தென்றிசைமுதல்வன்
சண்டமறலி
கூற்றுச்சமன்ஞமன்
செங்கோற்கடவுள்
இயமனென்றிவை
தங்கியநமன்மேற்
றரும்பெயராகும் (௰ங)

(காலன்பெயர்)

சண்டனுமறலியும்
கூற்றுஞ்சமனுமென்
றிந்தவகைப்பேர்
காலற்குமாகும் (௰ச)

(உமையவள்பெயர்)

காமக்கோட்டி
அம்பிகைகௌரி
ஆரியைசத்தி
அயிராணிபார்வதி
இமையவல்லி
உமையவள்பெயரே (௰ரு)

(கங்கையின்பெயர்.)

பகீரதிசாநவி
வரநதிசுரநதி
திரிபதகைமைந்தா
கிநியிவைகங்கை. (௰சு)

(காடுகொள்பெயர்)

காடுகாண்மோடி
காரிதாய்கொற்றி
மாரிசூரி
வடுகிமூதணங்கே. (௰எ)

(திருமகள்பெயர்.)

பொரிமாவாக்கம்
செல்விபொன்பூமகள்
செய்யாளிந்திரை
திருமகள்பெயரே
கமலைபதுமை
விமலைகோகநகை
அனையவுமவள்பெயர்
ஆகுமென்ப (௰அ)

(சரச்சுவதியின்பெயர்.)
பாரதிவாணி
பனுவலாட்டி
வெண்டாமரையாள்
வெள்ளைமேனியால்
நான்முகன்கிழத்தி
நாமகள்கலைமகள்
உலகமாதா
ஊர்பூரவாகநி
ஞானமூர்த்தி
நற்பாமடந்தை
சாவித்திரியே
காயத்திரியென
வாக்கின்செல்வியை
நோக்கியபேரே (௰௯)
(சேட்டையின்பெயர்.)
முகடிதௌவை
கலதிமூதேவி
காக்கைக்கொடியாள்
கழுதைவாகநி
கேட்டைகேடலணங்கு
சேடைப்பெயரே. (௨௰)
(இந்திராணியின்பெயர்.)
சுந்தரிசசியே
அயிராணிபுலோமிசை
இந்திரன்றேவிக்
கெய்தும்பெயரே. (௨௧)
(காளியின்பெயர்)
சூலியெண்டோளி
தாருகவிநாசநி
மாதரிவீரி
கௌரிமுக்கண்ணி
பைரவிகுமாரி
சாமுண்டிசண்டிகை
யோகிநிவேதாளி
யாமளைமாகாளி (௨௨)
(பகவதியின்பெயர்)
கொற்றவையையை
கார்த்திகைகௌரி
தூர்க்கைசூலி
மகிடற்காய்ந்தாள்
நீலியெண்டோளி
விந்தைசயமகள்
இருங்கலையூர்தி
எழிலரியேறி
மேதித்தலைமிசை
விசையையந்தரி
மாலுக்கிளையாள்
சக்கராயுதியே
பாலைக்கிழத்தி
பண்ணம்பணத்தி
நாராயணியே

கந்நிகுமரி
சிர்சால்பகவதி
சிறந்ததொல்பெயரோ ()
(இடாகினியின்பெயர்)
வஞ்சநிமாயவள்
வலவையிடாகினி (௨௪)
(யோகினியின்பெயர்.)
சங்மிநிசூர்மகள்
யோகினியாகும் (௨௫)
(அமரர்மாதர்பெயர்)
அரம்பையராமகளிர்
அமரர்மாதர்
தெய்வப் பெண்பொதுப்
பெயர்.
அணங்குஞ்சூரும்
தெய்வப் பெண்பொதுப்
பெயர் (௨௭) [ர்
தேவர்கள் பொதுப்பெய
வானவரிமையவர்
விண்ணவர்கடவுளர்
அமரர்சுரர்புலவர்
அண்டர்புத்தேளிர்
ஐயரும்பர்
தேவர்கள்பொதுப்பெயர்
பண்ணவர்பகவர்
திர்த்தர்பட்டாரகர்
புங்கவரெனவும்
கடவுளர்பொதுப்பெயர்
(அசுரர்பெயர்)
தாநவரவுணர்
தகுவர்தைத்தியரென்
றினையநான்கும்
நிசரசரருமசுரர். (௨௬)
(மாவலியின்பெயர்)
வைரோசநனே
மாவலியவுணன். (௩௰)
(இராக்கதர்பெயர்.)
அரக்கரிராக்கதர்
நிசாசரர்நிருதரென்
றுரைத்தநான்கும்
ஒன்றன்பால
சாலகடங்கடரும்
பிசிதாசனரும்
யாதுதானவரும்
அவ்வினத்தவரோ, (௩௧)
(வித்தியாதரர்பெயர்.)
விஞ்சையர்கேசரர்
வித்தியாதரர்பெயர் ()
(கந்திருவர்பெயர்)
தந்திரர்கிந்நரர்
வீணைவல்லவர்
கந்திருவர்பெயரெனக்

கருதல்வேண்டும் (௫௫)
(பூதகணத்தின்பெயர்.)
சாதகங்கிருத்திமம்
குறள்கூளிபாரிடம்
பூதகணமென்ப
புகன்றனர்புலவர், (௫௪)
(பேயின்பெயர்,)
கழுதுசோகு
கடிகண்மண்ணை
அலகைகூளி
பிசாசுவேதாளம்
பிரேதகஞ்சாவோன்
டிணங்குகுணபாசியென்
னையவீராறும்
பேயனல்வேண்டும்
(ஆகாசத்தின் பெயர்,)
அந்தரமாசினி
அம்பரமங்குல்
அண்டம்வானம்
ககனமீவெளி
விண்ணுகமாகும்
விசும்புதலையும்பர்
இடங்குடிலென்றுங்
கிவைபதினேழும்
அடங்கலிலாசா
அப்பெயராகும்

(காற்றின்பெயர்.)
வாதங்கூதிர்
வாங்கூழ்கால்வளி
ஊதையநிலம்
கோதையநீழல்
உலவைமாருதம்
மருத்துப்பவநம்
வாடையொலியே
கூதையுயிர்ப்பே
வெற்றலங்கொண்டல்
கோடையென்றிருபதும்
காற்றின்பெயரெனக்
கருதல்வேண்டும். (௫௭)
(பனிக்காற்றின்பெயர்)
கூதிருமூதையம்
குளிர்பனிக்காற்றே
(வடகாற்றின்பெயர்)
வாடைவடந்தை
வடகாற்றாகும் (௫௯)
(மேல்காற்றின்பெயர்)
கோடைமேல்காற்று ()
(கீழ்காற்றின்பெயர்)
கொண்டல்கீழ்காற்று
(தென்றலின்பெயர்)
மந்தாநிலமே
மலயக்காலே

தென்கால்வசந்தன்
தென்றலென் றிசைப்பர்
(சுழல்காற்றின்பெயர்,)
சூறைசாரிகை
சுழன்றெழுகாற்றே ()
(நெருப்பின்பெயர்,)
அழலங்காரகன்
அங்கிகனலி
எரிதழறபதன்
பாகவன்றீயனல்
செஞ்சுடர்ப்பகவன்
ஞெகிழுயுதாசநன்
உதவகன்றநஞ்செயன்
வசுவெழுநாவரி
தென்கிழ்த்திசையோன்
வந்நிதேயுவன்
றின்னவைபிறவும்
நெருப்பின்பெயரே ()
வடவாமுகாக்கினியின்
பெயர்.
உத்தரமடங்கல்
ஊழித்தீயென
வைத்தகடையனல்
வடவாமுகமே (௪௫)
(விளக்கின்பெயர்,)
தீபமுஞ்சுடரும்
விளக்கெனச்செப்புவர்
அனற்பொறியின்பேர்
புலிங்கமனற்பொறி
(அனற்றிரளின் பெயர்)
உற்கமனற்றிரள்
(காட்டேரியின்பெயர்)
தாவங்காட்டேரி (௪௬)
தீக்கடைக்கோலின்பேர்
அரணிஞெலிகோல்
தீக்கடைக்கோலே (௫௰)
(தீக்கடவுளின் பெயர்)
பாவகனத்தீக்
கடவுள்பெயரே. (௫௧)
(நீரின்பெயர்.)
அறலும்புனலும்
அப்பும்பாணியும்
உதகமுங்கமலமும்
அமுதமுங்கவந்தமும்
பயமுஞ்சலிலமும்
அயமுமளகமும்
புவநமும்வநமும்
கோவுங்கீலாலமும்
காண்டமுந்தோயமும்
நாரமுநீரே (௫௨)
(வெள்ளநீரின் பெயர்)
நீத்தம்பிரளயம்

வாரிவெள்ளநீர் (௫௩)
(புனற்கரசன்பெயர்)
மற்றப்புனற்கரசன்
வருணனாகும் (௫௪)
(அருக்கன்பெயர்)
வெய்யோனிருள்வலி
பதங்கன்சூரியன்
சுடரவன்றரணி
உதயனாதவன்
எல்லைமார்த்தாண்டன்
திநகரன்பனிப்பகை
பரிதிசெங்கதிர்
அலரிபானு
வெஞ்சுடர்க்கிரணன்
பகலவன்வேந்தன்
ஆயிரங்கதிரோன்
அழலவன்றிவாகரன்
இரவிபாற்கரன்
என்றாழருணன்
ஆதித்தன்கனலி
ஞாயிறுவிரிச்சிகன்
சான்றோனரியே
தபறனென்றினையவும்
ஆன்றவருக்கற்
கநந்தம்பெயரே. (௫௫)
(சந்திரன் பெயர்)
அம்புலிதிங்கள்
குபேரனருச்சிகன்
நிசாசரநிமகரன்
ஆலோன்களங்கன்
தண்சுடாக்கலையோ
னிராக்கதிர்தாநவன்
வியோமத்துடுபதி
அமுதகிரணன்
இந்துசோமன்
பிறைமதிசசி விதுவென
வந்தனபிறவும்
நிலவுஞ்சந்திரன். (௫௬)
(செவ்வாயின் பெயா)
அங்காரகன்குசன்
ஆரல்வக்கிரன்
மங்கலனறிவன்
செந்தீவண்ணன்
பூமகநிலமகன்
குருதிசேய்செவ்வாய்
நாமமென்றும்
நவின்றனர்புலவர் (௫௭)
(புதன்பெயர்)
அருணன்றாதுவன்
அநுவழிமேதை
மதிமகன்பாகன்
மாலவன்கணக்கன்

புந்திபுலவன்
சிந்தைகூரியோன்
அறிவன்புதனென
வந்தநாமம்
மற்றவர்க்காகும். (௮௫)

வியாழத்தின்பெயர்
மந்திரியாசான்
பீதகன்சுரகுரு
அந்தணனரசன், ஆண்ட
ளப்பான்பிரகற்பதி
சுந்தரப்பொன்குரு
மறையோன்வியாழம் ()

(சுக்கிரன்பெயர்.)
பளிங்குபார்க்கவன்
புகர்புயன்மழைக்கோள்
விளங்குதிங்கள்
பிரசுரன்சல்லியன்
ஒள்ளியோன்சுங்கன்
அரமந்திரியென
வெள்ளிசுதன்பிருகு
சுக்கிரன்பெயரே (௯௰)

(சநியின் பெயர்.)
மந்தன்காரி
கரியோன்முடவன்
அந்தநீலன்
கதிர்மகன்கீழ்மகன்
பங்குமேற்கோள்
சௌரிமுதுமகன்
சந்தில்சாவகன்
சநியின்பெயரே. (௯௧)

(இராகுவின்பெயர்)
இராகுக்கோள் கரும்பாம்
[பு. (௯௨)

(கேதுவின்பெயர்)
கேதுக்கோள் செம்பாம்பு

(அநந்தன்பெயர்)
அநந்தன்பெயரே
சேடனாகும் (௯௪)

(மேடவிராசியின்பெயர்)
வருடையுதட்கர்
மறிமைகொறியென.
விரியுமாட்டின்பெயர்
மேடவிராசி, (௯௫)

இடபவிராசியின்பெயர்
பாறல்புல்லம்
பாண்டில்பசுமூரி
ஏறுமுதல்வந்தன
இடபவிராசி

(மிதுநத்தின்பெயர்)
பரட்டைவையாடவை
இரட்டைசவைமகள்
மேவுமியாழ்ப்பல்பெயர்

தண்டேமிதுநம், சூஎ
கர்க்கடகத்தின்பெயர்
அளவனள்ளி
குளிஞெண்டார்மதி
கள்வனென்றிவை
கர்க்கடகப்பெயரே, ()
(சிங்கத்தின்பெயர்.)
அரிமாபுலியை
யாநநம்பரளி
தெரியிற்புலிசியப்
ப்ல்பெயர்சிங்கம்
கந்நியின்பெயர்.
பெண்மைப்பெயரே
கந்நிக்குமாகும், (எ௰)
துலாத்தின்பெயர்
நிறையேகட்டளை
வாணிகனிருப்பான்
துலையேகோலெனத்
துலாபெயர்பெறுமே,
விருச்சிகத்தின்பெயர்
தெறுக்கால்பறப்பன்
தேளேவிருச்சிகம்
நலமென்பெயரும்
தேளின்மேற்றே எ௨
தநுவின்பெயர்,
சாபங்காண்டீவம்

தநுவின்பெயரே (எ௩
மகரத்தின்பெயர்
மானேகலைசுறு
மகரப்பெயரே எச
கும்பத்தின்பெயர்
குடமேசாடிப்
பெயரேகும்பம்
'மீநத்தின்பெயர்
மீநமீனின்
பல்பெயர்பெறுமே
அச்சுவிநியின்பெயர்
இரலையைப்பசி
யாழேறுதலைநாள்
புரவிமருத்துவநாள்
அச்சுவினியென்ப எஎ
பரணிநாளின்பெயர்,
காடுகிழவோன்
பூதமடுப்பே
தாழிபெருஞ்சோறு
தருமநாள்போதமென
பாகுபுட்டது
பரணிநாட்பெயரே(எஅ)
(கார்த்திகையின்பெயர்)
அங்கியாரல்
அளக்கரளகிருள்
பொங்கியநாட்ன்

நாவிதன் வாணன்
தங்கொளியறுமீன்
தழனாள் கார்த்திகை
உரோகிணியின்பெயர்
பண்டிபார்சகடு
சாகாடுவையம்
ஒண்டிறலுருடேர்
அயனாளுரோகிணி ௮௰
மிருகசிரிடத்தின்பெயர்
மாழ்குபேராளன்
மான்றலையிந்திரன்
மார்கழிநரிப்புரம்
மதிநாண்மும்மீன்
பாலைவெய்யோன்
மிருகசீரிடப்பெயரே ()
திருவாதிரையின்பெயர்
மூதிரைசெங்கையாழ்
ஈசர்தினமென
ஆதிரைதன்பெயர்
ஆகுமென்ப (௮௨)
(புநர்பூசத்தின்பெயர்)
அதிதிநாண்மூங்கில்
கரும்பாவனம்பாலை
புநிதம்பிண்டி
புநர்தம்புநர்பூசம் (௮௩)
(பூசநாளின் பெயர்)

கொடிறுகாற்குளஞ்
சுரர்குருநாள்வண்டு
புணர்வதாகும்
பூசநாட்பெயரே (௮௪)
(ஆயிலியத்தின்பெயர்)
அரவினாள்கொளவை
ஆயிலியப்பெயரே ௮௫
(மகத்தின்பெயர்)
வேட்டுவன்கொடுநுகம்
எழுவாயெழுஞ்சநி
வாய்க்கால்பிதிர்நாள்
மாசிமகமாகும் ௮௬
(பூரத்தின்பெயர்.)
இடையதெழுஞ்சநி
எலியேதுர்க்கை
பகவதிநாணுவிதன்
கணையேபூரம் ௮௭
(உத்திரத்தின்பெயர்)
பங்குனிகடையது
எழுஞ்சநிபாற்குநி
மானேறுகதிர்நாள்
உத்திரமாகும்
அத்தத்தின்பெயர்,
கைம்மீகாமரம்
களிறுகௌத்துவம்
நவ்விகந்நி

ஐவிரலத்தம் கூஅ
சித்திரைநாளின்பெயர்,
நெய்வான்மீன்சுவை
பயற்றெருடுநேர்வான்
செவ்விதிற்றுவட்டநாள்
சித்திரையென்ப கூ௯

சோதிநாளின்பெயர்
விளக்கேவீழ்க்கை
வெறுநுகமரக்கால்
துளக்கமிலநிலநாள்
சோதிநாளுகும் கூக

விசாகநாளின்பெயர்
முறமேமுற்றில்
வைகாசியநிலநாள்
பெறுகுமேசுளகு
விசாகநாட்பெயரே

அநுடத்தின் பெயர்
பனைதேள்பெண்ணை
புற்ருளிபோங்தை
மித்திரநாளிவை
அநுடப்பெயரே கூ௩

கேட்டையின்பெயர்
துளங்கொளிவல்லாரை
வேதியெரிதழல்
கிளங்தவிங்திரனுள்
பின்றுக்கேட்டை கூச

மூலத்தின் பெயர்
கொக்கேதேட்கடை
குருகுவில்லன்றி
முற்றுமாணி
அசுரநாண்மூலம் கூரு

(பூராடத்தின்பெயர்)
கடைக்குளமுற்குளம்
நீர்நாள்பூராடம். (கூசு)

உத்திராடநாளின்பெயர்
ஆடியானி
உடைக்குளம் விச்சுவநா
நாடிலுத்திராடம் [ள்
நாளாகும்மே (கூஎ)

திருவோணத்தின் 'பெயர்
நலத்தகுவைரம்
நள்ளேசிரவணம்
உலக்கைசோனை
மாயோனுளோணம். ()

(அவிடத்தின் பெயர்.)
ஆவணிகாக்கை
பறவைபுள்வசுவநாள்
மேவியவிட்ட
மீனின்பெயரே. (கூகூ)

(சதயநாளின்பெயர்)
குன்றுபோரே
சுண்டன்பெருஞ்செக்கு

தங்குவருணனுள்
சதயநாளாகும் (௱)

(பூரட்டாதியின்பெயர்)
பூரட்டாதி முற்கொழுங்
கோல்பூரட்டாதி
உரைப்பர்நாழியும்
அந்நாளுடனே. (௱௧)

உத்திரட்டாதியின்பேர்
முரசுபிற் கொழுங்கோன்
மன்னனிம்மூன்றி
னேடுரைசெயறிவனுள்
உத்திரட்டாதி. (௱௨)

(இரேவதியின்பெயர்)
தொழுவேனாவாய்
தோணிசூலம்
பஃறிபுருடநாள்
கடைமீனிரேவதி. (௱௩)

(அருந்ததியின்பெயர்)
அருந்ததிசாலி
வடமீனாகும். (௱௪)

(வான்மீனின்பெயர்)
உடுத்தாரகைகணம்
ஒளிவான்மீனே. (௱௫)

காலநுட்பத்தின்பெயர்
துடியுங்கலையும்
தொடர்காலநுட்பம். ()

(நாழிகையின் பெயர்)
கன்னலுமிருத்தையும்
கடிகையும்பதமும்
சொன்னவிகலையும்
நாழிகைத்தொல்பெயர்

(பொழுதின்பெயர்)
வேலையுமமையமும்
காலையும்பதமும்
எல்லையுங்காலமும்
பொழுதெனப்படுமே
முன்னைநாளின்பெயர்
நென்னலுநெருநலும்
முன்னைநாளாகும் (௱௯)

(பின்னைநாளின் பெயர்)
பிற்றையும்பின்றையும்
பின்னைநாளாகும் (௱௰)

(உச்சியின்பெயர்)
நண்பகலுச்சி. (௱௰௧)

(சந்தியின்பெயர்)

அந்திசந்தி (௱௰௨)

(சாமததியின் பெயர்)

யாமஞ்சாமம். (௱௰௩)

(பகலின்பெயர்)

எல்லோபகலாம் (௱௰௪)

(வெய்யலின்பெயர்)

என்றூழாதவம்
வெயிலெனப்படுமே. ()

(சந்திரிகையின் பெயர்)

நிலவுசந்திரிகை
ஆகுமென்ப. ௱௰௬

இரவின்பெயர்.

எல்லையுங்கங்குலும்
யாமமுமாலையும்
அல்லு மங்குலும்
இரசனியுமல்கலும்
யாமினியுநிசியும்
எல்லுமிரவே ௱௰௭

இருளின்பெயர்

நிசியேநத்தம்
நீலமதனொடு
திமிரமுந்தமமும்
மிருளாகும்மே (௱௰௮)

(நாளின்பெயர்)

பகலும்வைகலும்
திவசமுந்தினமும்
ஆனியமுந்திவாவு
நாளாகும்மே (௱௰௯)

அருணோதயத்தின்பெயர்

வைகறைவிடியல்
புலரியருணோதயம். ()

(திதியின்பெயர்)

திதியேபக்கம். (௱௨௧)

(மாதத்தின்பெயர்.)

மதியேதிங்கள்
மாதமாகும் (௱உஉ)

முதற்பக்கத்தின்பெயர்

பக்கமுதலது
நந்தையாகும் (௱உ௩)

உ-ம். பக்கத்தின்பெயர்

பத்திரையென்ப
திரண்டாம்பக்கம் (௱உ௪)

மூன்றும்பக்கத்தின்
பெயர்.

மூன்றேசயைபக்கம்

நான்காம்பக்கத்தின்பெ
யர்.

நான்கேயிருத்தை

ஐந்தாம் பக்கத்தின்பெ
யர்

ஐந்தாம்பக்கம்
பூரணையாகும். (௱உ௭)

(பாதிநாளின்பெயர்)

அரைநாளும்பாதிநாளு
மத்தநாளும்பாதிநாள் ()

(மாத்திரையின் பெயர்.)

கணமேமாத்திரை (௱உ௯

(நிகழ்காலத்தின் பெயர்)

வேலையென்பது
நிகழுங்காலம் (௱௩௰)

(வெப்பத்தின் பெயர்)

உருப்பம்வெப்பம்
ஆகுமென்ப (௱௩௧)

(கோடையின் பெயர்.)

வேனில்கோடை
யிசைப்பெயராகும் ()

(சிறுபொழுதின்பெயர்)

ஒல்லைசிறுவரை
சிறுபொழுதாகும் ௱௩௩
அறுவகைப்பருவமாவன
காரேகூதிர்
முன்பனிபின்பனி
சீரிளவேனில்
முதுவேனிலென்றுங்
கிருமூன்றுவகைப்
பருவமவைதாம்
ஆவணிமுதலா
விரண்டிரண்டாக
மேவியதிங்கள்

எண்ணினர்கொளலே ()

பனியின்பெயர்.

இமமுந்துகினமும்
அஞ்சுநீகாரமும்
பனியின்பெயரெனப்
பகரப்படுமே. (௱௫௫)

(கார்காலத்தின்பெயர்)

காரொனுங்காலப்
பெயசுரற்காலம் ()

{கூதிர் காலத்திற்கும்
-பனிக்காலத்திற்கு
ம்பெயர்.}

கூதிர்காலமும்
குளிர்பனிக்காலம்
ஆருமென்ப
சிசிரநாளே (௱௫௭)

[பருவத்தின்பெயர்]

ஆனியமுமிருதுவும்
பருவமாகும் (௱௫௮)

(காலமாவன.)

பருவமும் யாண்டும்
காலமாகும் (௱௫௯)

[யுகத்தின்பெயர்]

ஊழியு முறையுளும்
யுகமாகும்மே. (௱௬௰)

[யுகமுடிவின்பெயர்]

ஊழியுமடங்கலும்.
யுகமுடிவாகும் (௱௬௧)

நான்முகன்வாழ்
நாளின்பெயர்

நான்முகன்வாழ்நாள்
கற்பமாகும் (௱௬௨)

(வாழ்நாளின்பெயர்)

ஆயுளாயுகம்

வாழ்நாளென்ப (௱௪௩)

(மேலின்பெயர்)

மேற்குவலமீ
உம்பர்மேலாகும் (௱௪௪)

(கீழின்பெயர்)

கிழக்குக்கீழே (௱௪௫)

(வருடத்தின்பெயர்)

துவலைபெயலை
துளியேமாரி
உறைபெயலாலி
உதகஞ்சித்றி
தூவல்சீரகம்
தூறல்வருடம் (௱௪௬)

(மேகத்தின்பெயர்)

மேகஞ்சீதம்
விசும்புவான்வெண்முகில்
கொண்மூமஞ்சு
கொண்டன்மைம்மழை
எழிலிகார்க்குயின்
கந்தரம்விண்டு
மங்குல்மால்செல்
கனமும்வணையார் (௱௪௭)

(இடியேற்றின் பெயர்)

உருமுஞ்செல்லும்
அசனியுமுருமேறு
இடியும்வானேறும்
இடியேற்றின்பெயரே

மழைபெய்துவிடுத

லின்பெயர்,

தலையலென்பது
மழைபெய்துவிடுதல் ()

விடாதுசொரிதலின்
பெயர்

சோனையும்பனித்தலும்
விடாதுசொரிதல், ௱௫௰

(பெருமழையின் பெயர்)
ஆசாரமென்பது

பெருமழையாகும்
(துளியின்பெயர்)
துளிபெயலாலி
உறைதுளியாகும்(௯௨)
ஆலங்கட்டியின்
பெயர்.
ஆலியாலங்
கட்டியாகும் (௯௩)
துவலையின்பெயர்
சீகரம்பிதிரோ
சிதாரிசீகரம்
தூவலென்றிவை
துவலையாகும்
[மின்னின்பெயர்]
தடித்துத்தடிமின்
[இடியின்பெயர்]
இடிப்பெயரிகுளே ()
[பரிவேடத்தின்பெயர்]
ஊர்கோள்வட்டம்
பரிவேடப்பெயரே.

[இந்திரவில்லின்பெயர்
வானவிலிந்திர
வில்லெனவறைவர்,

{ காமன்காண்டபத்
தின்பெயர் }

காமன்காண்டபம
கருப்புவில்லாகும்.

*[திவாகரவரலாறு]*

வடநூற்கரசன்
தென்றமிழ்க்கவிஞன்
கவியரங்கேற்று
முபயகவிப்புலவன்
செரிகுணத்தம்பற்
கிழவோன்சேந்த
னறிவுகரியாகத்
தெரிசொற்றிவாகரத்துள்

முதலாவது

# தெய்வப்பெயர்த்தொகுதி

முற்றிற்று,